இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 73 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 05 – செவ்வாய்க்கிழமை 22 அக்டோபர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 73: Thiruvalluvar Year - 2055 - Ayppasi 05 - Tuesday 22 October 2024 - Madurai 16 Pages ₹ 5.00


## பக்தியை பகல் வேஷ அரசியலுக்குப் பயன்படுத்துபவர்களால் கழக அரசின் சாதனைகளைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை!

# ‘உண்மையான’ பக்தர்கள் பாராட்டுகிறார்கள்!

## அறநிலையத் துறை சார்பில் 31 இணைகளுக்கு மணவிழாவை நடத்திவைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, அக். 22 -**

**கழக அரசின் சாதனைகளை உண்மையான பக்தர்கள் பாராட்டுகிறார்கள். பக்தியை பகல் வேஷ அரசியலுக்குப் பயன்படுத்துபவர்களால் நமது அரசின் சாதனைகளைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறநிலையத்துறை சார்பில் 31 இணைகளுக்கு மணவிழாவை நடத்தி வைத்து உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) சென்னை, திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, எந்தத் துறையின் சார்பில் அதிக நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன் என்றால், அது இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள்தான். அதற்குக் காரணம் அந்தத் துறையின் அமைச்சர் சேகர்பாபு தான். அவர் எப்போதுமே என்னை விடமாட்டார். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்த நிகழ்ச்சிக்கு ஒரு முக்கியத்துவம் தந்து அது எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய வகையில் நடத்தக்கூடிய ஆற்றலை பெற்றவர் நம்முடைய சேகர்பாபு அவர்கள்.

நான் கலந்துகொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளை நேற்றுதான் ஒரு கணக்கெடுத்துப் பார்த்தேன். எந்த மாவட்டத்திற்கு அதிகம் சென்றிருக்கிறேன்; எந்தத் துறைக்கு அதிகம் சென்றிருக்கிறேன்; வெளி மாவட்டங்களுக்கு எத்தனை முறை நான் பயணம் செய்திருக்கிறேன். அதுபோல, முதலமைச்சரின் அலுவலகத்தில் இருக்கக்கூடிய வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக எத்தனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன் என்று கணக்கெடுத்துப் பார்த்தேன். அனைத்து கணக்கிலும் முந்தியிருப்பது அறநிலையத் துறைதான்.

அந்த வகையில் இன்றைக்கு இந்த அறநிலையத் துறையின் சார்பில், அமைச்சர் சேகர்பாபு அவர்களின் சீரிய முயற்சியோடு 31 இணையர்களுக்கு திருமணம் நடத்தி வைக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பினை பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். பெருமைப்படுகிறேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜே.எம்.எச். அசன் மவுலானா, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ச.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செயல்வீரர் சேகர்பாபு

இந்த அறநிலையத்துறை மட்டுமல்ல, அனைத்துத் துறைகளை எடுத்துக்கொண்டாலும் அதை சரிசமமாக நாங்கள் அதற்குரிய சிறப்பைத் தந்து முக்கியத்துவம் கொடுத்து அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுண்டு. இந்தத் துறையை பொறுத்தவரைக்கும், இரவு பகல் பாராமல் நம்முடைய செயல்வீரராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய சேகர்பாபு அவர்கள் அமைச்சராக கிடைத்திருக்கிறார்கள்.

நான் முதலில் இந்த 31 இணையர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் ஒன்றை கவனித்துப் பார்த்தேன். அதாவது, ஒவ்வொன்றாக நான் சென்று நடத்தி வைத்தால் நேரமாகிவிடும் என்பதற்காக, நான் ஓரிடத்தில் இருக்கும் போது, அந்த தம்பதிகளை மட்டும் தனித்தனியாக இங்கே வரவழைத்து அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லக்கூடிய வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்த வித குழப்பம் இருக்கக்கூடாது. நான் போகின்ற நேரத்தில் அவர்களுக்கு இடையூறு வந்துவிடக்கூடாது என்பதற்காக இந்த நிகழ்ச்சியை நம்முடைய சேகர்பாபு அவர்களும், இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

நீங்கள் மற்றொன்றையும் கவனித்துப் பார்க்கலாம். அதாவது ஒவ்வொரு ஜோடிகளும் வரும்போது, அவர்கள் கையில் ஒரு தட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தட்டை யாரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள் என்றால், மாப்பிள்ளையிடம் கொடுத்திருக்கிறார்கள். மாப்பிள்ளை தட்டு ஏந்தவேண்டும்; நான் குறைத்து பேச விரும்பவில்லை; விமர்சித்து பேச விரும்பவில்லை; அப்படிதான் பெண்களுக்குரிய தகுதியை, பெண்களுக்குரிய உரிமையை நாம் தந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு இது ஒரு சாட்சி; இது ஒரு அடையாளம். அந்த வகையில், இந்த மணவிழா நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து நானும் மணமக்களை வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

### கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு சாதனைகள்!

கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த துறையின் சார்பில் பல்வேறு சாதனைகளை நம்முடைய அமைச்சராக இருக்கக்கூடிய சேகர்பாபு அவர்களின் முயற்சியோடு நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

**திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, கோயில்களை பழமை மாறாமல் புதுப்பிக்க மாநில அளவிலான ஒரு வல்லுநர் குழுவை அமைத்தோம். அவர்கள் வழங்கிய ஆலோசனைப்படி, தான் அந்தப்பணியை நாம் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.**

➢ கடந்த மூன்றாண்டு காலத்தில், 2 ஆயிரத்து 226 திருக்கோவில்களில் திருப்பணிகள் முடித்து குடமுழுக்கு விழா சிறப்பாக நடத்தப்பட்டிருக்கிறது. இது மிகப் பெரிய சாதனையாகும்.

➢ 10 ஆயிரத்து 238 திருக்கோவில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

➢ நன்கொடையாளர்கள் கொடுத்திருக்கக்கூடிய 1103 கோடி ரூபாய் நிதியின் மூலமாக 9163 பணிகள் திருக்கோவில்களில் தற்போது நடைபெற்று வருகின்றன.

➢ இந்த மூன்று வருட காலத்தில் 7 ஆயிரத்து 69 ஏக்கர் கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு 6 ஆயிரத்து 792 கோடி ரூபாய் ஆகும். இந்த சாதனையைப் பார்த்து பக்தர்கள் மகிழ்ச்சிப் பெருக்கோடு நம்முடைய அரசை மனதார பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

➢ ஒரு இலட்சத்து 74 ஆயிரத்து 894 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லைக்கற்கள் நடப்பட்டு, கோவில் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.


தொடர்ச்சி 4–ஆம் பக்கம்


---

## இந்து சமய அறநிலையத் துறை

# திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்தார்!

**சென்னை, அக். 22-**

**இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்.**

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:–

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2024) சென்னை, திருவான்மியூர், அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தன் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

மேலும், திருக்கோயில்கள் சார்பில் கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்களை நிறுவி அறப்பணிகளை மேற்கொள்ளுதல், சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும் விழா எடுத்து சிறப்பு செய்தல், பொருளாதாரத்தில் பின்தங்கிய இணை களுக்கும், மாற்றுத்திறனாளி இணைகளுக்கும் சீர்வரிசைகளை வழங்கி திருமணம் செய்து வைத்தல், மகா சிவராத்திரி மற்றும் நவராத்திரி பெருவிழாவினை பக்தர்கள் பங்கேற்புடன் சிறப்புற நடத்துதல் போன்ற பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, திருக்கோயில்கள் சார்பில் 500 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்திடும் வகையில் கடந்த 4.12.2022 அன்று முதலமைச்சர் அவர்கள் 25 இணைகளுக்கு தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் மொத்தம் 500 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

**1,100 இணைகளுக்கு திருமணங்கள்!**

அதனைத் தொடர்ந்து, 2023–2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, ”பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50,000/– மதிப்பிலான சீர்வரிசைப் பொருட்களுடன் 600 இணைகளுக்கு திருமண விழா நடத்தி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, முதற்கட்டமாக முதலமைச்சர் அவர்கள் 7.07.2023 அன்று 34 இணைகளுக்கு திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

இந்த அரசு பொறுப்பேற்றபின், 2022–2023 ஆம் நிதியாண்டில் 500 இணைகளுக்கும், 2023 – 2024 ஆம் நிதியாண்டில் 600 இணைகளுக்கும், என மொத்தம் 1,100 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

2024–2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் “பொருளாதாரத்தில் பின்தங்கிய 700 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதற்கட்டமாக சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 31 இணைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் (21.10.2024) திருமணத்தை நடத்தி வைத்து, பரிசுகள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். சென்னை உட்பட மாநிலம் முழுவதும் மொத்தம் 379 இணைகளுக்கு திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

இணைகளுக்கு மாங்கல்யத்துடன் சீர்வரிசைப் பொருட்களாக கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் எரிவாயு அடுப்பு, வெட் கிரைண்டர், மிக்சி, குக்கர், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திருப்பெரும்புதூர், உலகாரிய ராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள், தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு சிதம்பரநாத ஞான பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜே.எம்.எச்.அசன் மவுலானா, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ச.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, அக். 22 -*

*மத்திய கிழக்கு வங்கக்கடல், அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவானது. இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி மேற்குவடமேற்கு நோக்கி நகர்ந்து, இன்று காலை காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடையும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தொடர்ந்து மத்திய கிழக்கு வங்கக்கடலில் நாளை டானா புயலாக வலுவடைகிறது.*

*தமிழகத்தில் வடகிழக்கு பருமவழை பெய்யத் தொடங்கியுள்ளதை அடுத்து, கடந்த வாரம் கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. இந்நிலையில், வங்கக் கடலில் வடதமிழக கடலோரப் பகுதிகளை ஒட்டி ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி தற்போது காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவானது. அதன் காரணமாக வட தமிழகத்தில் அனேக இடங்களில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. அந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேலும் வலுப்பெற்று 23ம் தேதி புயலாக மாறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. புயலாக மாறும் போது ஏற்கனவே புயல் பட்டியலில் உள்ள பெயர்களின் வரிசைப் படி ‘டானா’ என்று பெயரிடப்படும்.*

*இந்த டானா புயல் மேற்குவடமேற்கு நோக்கி நகர்ந்து, 24ம் தேதி காலை ஒடிசா, மேற்கு வங்கம் இடையே கரையை கடக்க வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது. இந்த நிகழ்வின் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. குறிப்பாக ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், அரியலூர், பெரம்பலூர், திருச்சி, மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.*